# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, மருத்துவத் தேவைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1990, செத்தெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1990, செத்தெம்பர் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 — தபாற் செலவு : ரூபா 1.00

**1990 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, மருத்துவத் தேவைகள் (திருத்தச்) சட்டம்.**

[1990, செத்தெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஏ 28/89

**மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, மருத்துவத் தேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் மருத்துவத் தேவைகள் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அதன் பந்தி (ஆ) வை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 226 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் பந்தி (ஆ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) எவரேனும் நோயுற்ற தொழிலாளி அல்லது தொழிலாளிகளைக் கவனிக்கும் நோக்கத்திற்காக ஒரு தோட்டத்திற்கான வருகை யொன்று தொடர்பில், 10 ஆம் பிரிவின்கீழ்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் பந்திகள் (ஆ), (இ) அத்துடன் (ஈ) என்பவற்றை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் பந்தி (ஆ) இல் "அல்லது தாபரிப்பு" என்ற சொற்களை விட்டுவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.